# பசுமை நிறைந்த சூழலில் அழகிய சுற்றுளா விடுதிபோல் காட்சியளிக்கும் வல்வெட்டித்துறை வைத்தியசாலை

(29 ஆம் திகதி தொடர்ச்சி)

வல்வைமண் வல்லமையுடன் எழுந்து நிற்பதற்கும் அதன் பெருமைகளைத் தன்னகத்தே பெயருக்கு ஏற்றால் போன்று வல்லமையுடைய வல்வெட்டித்துறை பல சான்றுகளையும்இ பண்புகளையும் கொண்டிருப்பதற்கும் வல்வை மண்ணில் புதையுண்டிருக்கும் சிறப்பியல்புகளில் ஒன்றாக விளங்குவது அன்றைய வல்வெட்டித்துறை இந்திராணி ஆஸ்பத்திரிஇ தற்போது இது இன்றைய வல்வைப் பிரதேச வைத்தியசாலையாக மிளிர்கின்றது.

வல்வெட்டித்துறை மண் வரலாற்று மைந்தர்களைப் படைக்கின்றதா? அல்லது வல்வை மைந்தர்கள் வரவலாற்றைப் படைக்கின்றாரகளா? இந்தக் கேள்விகள் தர்க்க ரீதியாக இருந்தாலும் மண்ணின் வரலாறு நீண்டது என்ற ரீதியில் வல்வை மண்ணே வரலாற்று வல்லுநர்களைப் படைக்கின்றது என்பதை முடிவாகக் கொள்வோம்.

இ.அப்புக்குட்டியாப்பிள்ளையின் சேவையைப் பாராட்டி ஒருதடவை வல்வைக்கு வந்த பிரபல அரசியல்வாதி ‘‘அரசினால் அமைக்கப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைப்பதற்காகத்தான் வழமையாக எங்களை அழைப்பார். ஆனால் நீங்கள் கட்டிய கட்டிய கட்டடத்தைத் திறந்து வைப்பதற்கு வல்வைமண் எங்களை அழைத்துள்ளது. எனப் பெருமைப்படுத்தினார்.

எனினும் வல்வை மண்ணின் சுகாதாரத் தேவைகள் மனித வளங்களுக்கு அதிகரிக்காமை பல சேவைகளுக்கு வழிவகுத்தது.

ஆந்தக் காலகட்டத்தில் அதாவது 1960 ஆம் ஆண்டுகளில் வல்வைமண் தனது மற்றொரு புதல்வனை அறிமுகமாக்கியது. அவர்தான் சிற்றம்பலம் விஸ்ணு சுந்தரம் எனும் பிரபல வர்த்தகர். இந்திராணி வைத்தியசாலையின் முன்பக்கமாக இரு மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியைத் தனது சொநடத நிதியில் நிறுவிக் கொடுத்தார். இதற்குத் தனது தாயின் பெயரான சிற்றம்பலம் பார்வதிப்பிள்ளை பிரசவ விடுதி எனும் பெயரைச் சூட்டிமகிழ்ந்தார். இந்தக் கட்டடத் தொகுதி மேல்மாடியில் குழந்தைகள் விடுதியும் கீழ்மாடியில் பிரசவ விடுதியுமாகச் செயற்படும் வகையில் அமைந்துள்ளது.

இது 02.02.1966 ஆம் ஆண்டில் நாட்டிலிருந்த சுகாதார அமைச்சர் ஜே.ஆர் ஜெயவர்த்தனவால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் 42 படுக்கை வசதிகளைக் கொண்ட வைத்தியசாலை 87 படுக்கை வசதிகளைக் கொண்டதாகவும் விஸ்தரிக்கப்பட்டது. இந்த வைத்தியசாலைப் பணி நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலையில் சிறிது தடுமாறினாலும் Dr. க.மயிலேறும்பெருமாள் இந்த வைத்தியசாலையைப் பொறுப்பேற்றுத் தனக்கே உரித்தான பாணியில் பல திட்டங்களை வகுத்து பல பாராட்டுதல்களைப் பெற்று ஒரு முன்னணி வைத்தியசாலையாக நடாத்தி வருகின்றார்.

பிரதி மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் குறிப்பிடும் பொழுது தனது ஆளுமைகுட்பட்ட இந்தத் தரத்திலான வைத்தியசாலைகளுள் இது எல்லா வகையிலும் முன்னணியில் நிற்பதாகவும் தற்பொழுது நிகழ்த்தப்படுகின்ற போட்டிகளில் சிறந்த பிரதேச வைத்தியசாலையாகத் தெரிவு செய்யப்படலாம் எனவும் எதிர்வு கூறியுள்ளார்.

1966 ஆம் ஆண்டுவரை வல்வை மக்களால் மட்டும் கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்ட போதிலும் பின்னர் இலங்கை அரசும் தனது பங்களிப்பைச் செய்யத் தொடங்கியது.

Dr. க.மயிலேறும்பெருமாள் ஏற்கனவே இயங்கி வந்த வல்வை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபைக்குத் தலைமைதாங்கி அதனைப் புனரமைத்து வலுவூட்டியதன் மூலமும் தனது சொந்த ஆளுமையினால் வல்வை நலன்வரும்பிகள்இ புலம்பெயர் வல்வை மக்கள்இ அரச சார்பற்ற நிறுவனங்கள்இ வெளிநாட்டு பிரமுகர்கள் ஆகியோரின்

பேராதரவை ஒன்று திரட்டியும் அரும்பெரும் சாதனைகள் படைத்ததன் மூலமும் வல்வையின் வரலாற்று மைந்தர்களில் ஒருவராகத் திகழ்ந்து இந்த வைத்தியசாலைக்கும் அதன் வளர்ச்சிக்கும் அரும்பணி ஆற்றி வருகின்றார்இ இதுவெறும் புகழ்ச்சிக்காக வல்ல வைத்தியசாலை வளர்ச்சிக்காகவே ஆகும்.

இதன் அங்கமாகவே 23.01.2011ல் ஆம் திகதியில் இந்திராணி வைத்தியசாலை நிறுவுநர் சிலை Dr. க.மயிலேறும்பெருமாளால் திரை நீக்கம் செய்யப்பட்டது. அதுமட்டுமின்றி அமரர் இ.அப்புக்குட்டியாப்பிள்ளைஇ அமரர் இந்திராணி மற்றும் அமரர் வி.விஸ்ணு சுந்தரம் ஆகியோரின் உருவப்படங்கள் வல்வை மண்ணில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வைத்தியசாலை வளாகத்தில் வைத்தும் கௌரவிக்கப்பட்டன.

இந்த வைத்தியசாலை தற்பொழுது சகல வநதிகளையும் கொண்டு பசுமை நிறைந்த சுற்றுப்புறச் சூழலில் பாக்கு நீரிணையில் இருந்து வீசும் இதமான காற்றுடன் ஓர் அழகிய சுற்றுளா விடுதி போலக் காட்சி அளிக்கின்றது. இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து வருபவர்கள் முக்கியமாகப் புலம்பெயர் வாழ் உறவுகளின் பெற்றோர்கள் இங்கு தங்கி வைத்திய வசதி பெற்று வருகின்றனர். வயோதிபர்கள்இ வைத்திய அதிகாரிகளையும் ஊழியர்களையும் தமது சொந்த உறவுகளாகவே கருதிப் பழகி நிம்மதி கொள்கின்றமையையும் நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது.

நடராஜா சிவரத்தினம்
ஓய்வுபெற்ற உதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கை வங்கி

# வல்வை மைந்தர்களின் சாதனையாளர்களை கௌரவிக்கும் வல்வெட்டித்துறை வைத்தியசாலை

(கடந்த வரரத் தொடர்ச்சி)

புலம்பெயர் வாழ் உறவுகளின் பெற்றோர்கள் இந்த வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் தங்கி வைத்திய வசதி பெற்று வருகின்றனர். இவ்வாறான இந்த வைத்திசாலைக்கு ஆகக் குறைந்தளவு வைத்திய அதிகாரிகளும் ஊழியர்களும் வந்து சேவையாற்ற முன்வரும் பட்சத்தில் பொதுமக்கள் நன்மை அடைவதுடன் பல சாதனைகளும் படைக்கப்படலாம்.

தியாக சிந்தனையுடன் பெசயற்பட்டால் எல்லாமே கைகூடும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் டாக்டர்.மு.மயிலேறும்பெருமாள் தலைமையிலான வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு இயங்கி வருகின்றது.

அபிவிருத்திச் சபையின் பணி சேவைகளுடன் நின்றுவிடவில்லை. வல்வை மண்ணில் வாழ வேண்டிய மக்களும் சாதனையாளர்களும் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்வதாலும் இந்தியாவில் அகதிகளாக இருப்பதாலும் பொதுப் பணிகளை எடுத்துச் செயற்படுத்த அரிதாகவே இங்கு சிலர் வாழ்ந்து வருவதால் வல்வை மக்கள் துவண்டு விடாமல் இருக்கவும் சாதனையாளர்களையும் கனவான்களையும் கௌரவித்து ஊக்குவிக்கும் நற்செயல்களிலும் இந்தச் சபை ஈடுபட்டு வருகின்றது.

இதன் ஒரு படியே இந்திராணி வைத்தியசாலையை உருவாக்கிய இ.அப்புக்குட்டியாப்பிள்ளைக்கு சிலை எழுப்புதலும் அவரைத் தொடர்ந்து அர்ப்பணிப்புச் செய்த சி.விஸ்ணுசுந்தரத்தை நினைவு கூர்ந்து கௌரவித்தலுமாகும். இந்த வைரவிழா 2007ல் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆயினும் நாட்டுச் சூழ்நிலை காரணமாக 23.01.2011 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்டது.